சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையம்
பழனி ஆண்டவர் கோவிலுக்கு அருகாமை.
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

# செயற்பாட்டு அறிக்கை

| | | |
|---|---|---|
| திட்டம் | : | வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை செல்லுகின்ற மாணவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு சுழற்சிமுறை கடன் திட்டத்தின் கீழ் துவிச்சக்கர வண்டிகள் வழங்குதல். |
| யாருக்கு | : | வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை செல்லுகின்ற மாணவர்களுக்கு. |
| நிதி உதவி வழங்கியோர் | : | தமிழ் பொறியியலாளர் சங்கம் - அவுஸ்ரேலியா. |
| நிதி வழங்கிய ஆண்டு | : | 18.12.2015. |
| திட்டம் | : | II - குழு - III |
| இணைப்பாளர் | : | சிவனருள் இல்லம் - அவுஸ்ரேலியா. |
| நடைமுறைப்படுத்துவோர் | : | சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையம் (CCYE) |
| கிராம சேவையாளர் பிரிவு | : | J/271 சிறுப்பிட்டி கிழக்கு, J/272 சிறுப்பிட்டி தெற்கு, J/130 சுதுமலை தெற்கு, J/279 அச்செழு. |
| பிரதேச செயலக பிரிவு | : | கோப்பாய், சண்டிலிப்பாய். |
| மாணவர்களின் தொகை | : | 10 |
| திகதி | : | 21.02.2018. |

18.12.2015 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் அமைந்துள்ள தமிழ்ப் பொறியியலாளர் சங்கம் - அவஸ்ரேலியா நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பின் ஊடாக முதலாவது குழுவிலுள்ள வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பாடசாலை செல்லுகின்ற 10 மாணவர்களுக்கு வட்டியில்லா சுழற்சி முறைக் கடன்திட்டத்தின் கீழ் 10 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. அவர்கள் 28.12.2016 அன்று மீளச் செலுத்தி முடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் 08.01.2017 அன்று இரண்டாவது குழுவிலுள்ள வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பாடசாலை செல்லுகின்ற 10 மாணவர்களுக்கு வட்டியில்லா சுழற்சி முறைக் கடன்திட்டத்தின் கீழ் 10 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. அவர்கள் 27.01.2018 அன்று மீளச் செலுத்தி இருந்தனர்.

கடந்த 2018 தை மாதம் நிறுவனத்திடம் 100 துவிச்சக்கர வண்டிகள் தேவையெனக் கேட்டிருந்த மாணவர்களுள் உடனடியாகத் தேவைப்படுகின்ற 10 மாணவர்களை இனங்கண்டு 17.02.2018 அன்று சிறுப்பிட்டி அம்மன் மகளீர் விவகாரக் குழுவிலுள்ள 08 மாணவர்களுக்கும், 18.02.2018 அன்று சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையத்திலுள்ள 02 மாணவர்களுக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வு – 01

**அம்மன் மகளீர் கிராம அபிவிருத்திக் குழு - சிறுப்பிட்டி**

இந்த நிகழ்வானது 17.02.2018 அன்று மாலை 03.00 மணியளவில் **சிறுப்பிட்டி அம்மன் மகளீர் கிராம அபிவிருத்திக் குழு** அலுவலக திறந்த வெளி மண்டபத்தில் தலைவி திருமதி த.சுகண்யா அவர்களின் தலைமையில் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. முதலாவது நிகழ்வாக மாணவர்களதும், பெற்றோர்களதும் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்பட்டன. இந்த நிகழ்வில் 08 மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும், சிறுப்பிட்டி அம்மன் மகளீர் கிராம அபிவிருத்திக் குழு தலைவி திருமதி. த. சுகண்யா, செயலாளர் திருமதி ஜெ. தமிழினி, பொருளாளர் திருமதி. த. வதனி, நிறுவனத்தின் தலைவர் திரு. சி.பரமசாமி, நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் திரு. ஆ. ரஞ்சித் சைலேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து தலைவி அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. தலைவி தனது உரையில் சிறுப்பிட்டி கிராமத்தில் உள்ள மகளீர்களுக்காகவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்காகவும் தங்களது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் விளக்கிக் கூறினார். அத்துடன் நிதியை வழங்கிய தமிழ் பொறியியலாளர் சங்கம் - அவுஸ்ரேலியா நிறுவனத்திற்கும், நிதியைப் பெற்றுத் தந்த சிவனருள் இல்லம் - அவுஸ்ரேலியா நிறுவனத்திற்கும், இதனை நடைமுறைப்படுத்திய சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையத்திற்கும் நன்றி கூறினார்.

தொடர்ந்து சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையத்தின் தலைவர் திரு. சி. பரமசாமி அவர்களால் நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் திட்டச் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் திரு. ரஞ்சித் சைலேந்திரகுமார் அவர்களால் **தமிழ் பொறியியலாளர் சங்கம் - அவுஸ்ரேலியா நிறுவனத்தினதும்** மற்றும் **சிவனருள் இல்லம் - அவுஸ்ரேலியா** நிறுவனத்தினதும் சமூக நலத்திட்டங்கள் தொடர்பாகவும், இந்த திட்டத்தின் மூலம் எவ்வாறு பயனடையலாம், இதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் எவை? என்பது தொடர்பாகவும் பயனாளிகளுக்கு முன் உதாரணங்களுடன் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து நிறுவனத்தின் தலைவர் அவர்களாலும், மாதர் சங்கத் தலைவி அவர்களாலும் துவிச்சக்கர வண்டிகள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. இறுதியாக மாணவர்கள் சார்பாக செல்வி. ம.அனோஜா அவர்களும் பெற்றோர் சார்பாக திருமதி. க.கஜீதா அவர்களும் இந்த நிதியுதவியை வழங்குவதற்கு அனுசரனை வழங்கிய தமிழ்ப் பொறியியலாளர் சங்கம் - அவஸ்ரேலியா, நிறுவனத்திற்கும், இந்த உதவியைப் பெற்றுத்தந்த சிவனருள் இல்லம் - அவுஸ்ரேலியா நிறுவனத்திற்கும், இதனை நடைமுறைப்படுத்திய சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையத்திற்கும் நன்றி கூறினர். இந்த நிகழ்வு மாலை 04.30 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

நிகழ்வு – 02

**சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையம் - கோண்டாவில்**

இந்த நிகழ்வானது 18.02.2018 அன்று மாலை 02.30 மணியளவில் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையத்தின் அலுவலக திறந்த வெளி மண்டபத்தில் நிறுவனத்தின் தலைவர் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. முதலாவது நிகழ்வாக மாணவர்களதும், பெற்றோர்களதும் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்பட்டன. இந்த நிகழ்வில் 02 மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும், நிறுவனத்தின் தலைவர் திரு. சி.பரமசாமி, நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் திரு. ஆ. ரஞ்சித் சைலேந்திரகுமார், காசாளர் திருமதி. அ.யோகமலர், கணக்காளர் செல்வி. பா.சுபானு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையத்தின் தலைவர் திரு. சி. பரமசாமி அவர்களால் நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் திட்டச் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் திரு. ரஞ்சித் சைலேந்திரகுமார் அவர்களால் **தமிழ் பொறியியலாளர் சங்கம் - அவுஸ்ரேலியா நிறுவனத்தினதும்** மற்றும் **சிவனருள் இல்லம் - அவுஸ்ரேலியா** நிறுவனத்தினதும் சமூக நலத்திட்டங்கள் தொடர்பாகவும், இந்த திட்டத்தின் மூலம் எவ்வாறு பயனடையலாம், இதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் எவை? என்பது தொடர்பாகவும் பயனாளிகளுக்கு முன் உதாரணங்களுடன் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து நிறுவனத்தின் தலைவர் அவர்களால் துவிச்சக்கர வண்டிகள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு மாலை 03.15 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

குறிப்பு :

18.12.2015 அன்று இத்திட்டத்திற்காக துவிச்சக்கரவண்டிகளை வழங்குவதற்கு ரூபா 137,640/= வழங்கப்பட்ட நிலையில் தற்போது துவிச்சக்கரவண்டிகளின் விலையேற்றத்தால் இந்த முறை துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் போது எமக்கு ரூபா 145,950/= செலவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே ரூபா 8,310/= மேலதிகமாக செலவு செய்ததுடன் துவிச்சக்கரவண்டிகளை ஏற்றி இறக்கிய கூலியாக ரூபா 1,800/= இனை செலவு செய்துள்ளோம் என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

- இத்துடன் கணக்கறிக்கை, பற்றுச்சீட்டு, கொடுப்பனவுப் பத்திரம் மற்றும் புகைப்படங்கள் என்பன தங்களின் பார்வைக்காக அனுப்பி வைக்கின்றேன்.

நன்றி

**ஆ.ரஞ்சித் சைலேந்திரகுமார்**
நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர்.
சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான வலுவூட்டல் நிலையம்.
21.02.2018.